பதால், இந்திய மருத்துவ முறைகளையும் வைத்து, அவைகளில் வைத்தியம் செய்து கொள்பவர்களுக்கும், சரியான அத்தாட்சியோடு, அந்த வியாதிக்காட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்கான வவுச்சர்கள், பில்களை சட்டப்படி ப்ரடியூஸ் பண்ணினால் அதையும் ஏற்றுக் கொண்டு அந்த மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மென்ட் செய்து தர வேண்டும். அது ஆங்கில முறை வைத்தியத்திற்கு மட்டும் என்ற நிலை இருக்கக் கூடாது என்பதையும் நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பதிலுரையாக விளக்க உரை எதுவும் நிகழ்த்த வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அடுத்து இலங்கைத் தமிழர் குறித்த தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் இதில் நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஏற்கெனவே இந்த அவையில் நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி விவாதிக்கப்பட்ட மானியத்தில் உறுப்பினர்கள் பலரும் எழுப்பிய கோரிக்கைகளின் அடிப்படையில் அன்றைக்கே அவையின் முன்னவர் கல்வி அமைச்சர் அவர்களால் அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட பல சம்பள விகிதங்களுக்கான சட்டமுன்வடிவு இன்று சட்டமாக ஆகிறது என்பதே தவிர, வேறு ஒன்றும் இதில் புதுமை இல்லை. இதிலே ஒரேயொரு திருத்தம். அரசுக் கொறடாவையும் பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் ஆகியோருடைய வரிசையிலே இணைத்து அவர்களுக்கு உள்ள வசதிவாய்ப்புகள், ஊதியம் இவைகள் தரப்படுவதற்கான திருத்தம் அரசின் சார்பில் தரப்பட்டிருக்கின்றது. முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் வழங்கப்பட்ட சம்பளம் ரூ. 2,100 என்பதிலிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. பேரவைத் துணைத் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், அரசுக் கொறடா ஆகியோருடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,900 என்பதிலிருந்து ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

11-20 மணி

உறுப்பினர்களுக்கு 600 ரூபாய் என்று இருந்தது, ஆயிரமாக உயர்த்தப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுப்படி மாதம் ஒன்றுக்கு 700 ரூபாய் என்று இருந்தது, 800 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. தொலைபேசிப் படி திங்கள் ஒன்றுக்கு 450 ரூபாய் என்பது 700 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. எனவே இதுவரையில் 1,750 ரூபாய் என்ற அளவுக்குப் பெற்றுக் கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் 2,500 ரூபாய் வழங்கப்படுகின்றது என்ற ஒரு நிலையிலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு வீடு, கார், செக்யூரிட்டி, கன்மேன் போன்றவைகளெல்லாம் வழங்குவதற்கும் ஏற்கெனவே உத்திரவு இடப்பட்டிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் பேசும்போது உறுப்பினர்கள் உள்ளே வந்து கடமையை ஆற்ற வேண்டும், கையெழுத்து மாத்திரம் போட்டு விட்டுப் போகக் கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி சட்டமன்ற விதிகளை ஆராய்ந்து—சட்டமன்ற விதிகளை வகுக்கும்போது அந்த விதிகளுக்காக அமைக்கப்பட்ட குழு இதனை ஆலோசித்து முடிவு எடுத்து— அந்த விதியை அதிலே இணைக்க வேண்டும். அது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஜனநாயகத்திலே ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று சொல்வார்கள். எதிர்க்கட்சிக்கு உரிய மதிப்பினை ஆளும் கட்சி தருவதும், ஆளுங்கட்சிக்கு உரிய மதிப்பை எதிர்க்கட்சி தருவதும்— எவ்வளவு தான் காரசாரமான விவாதத்தை—சூடான பேச்சுக்கள் இருந்தாலும் கூட—அதிலே மனத்திற்குள் வெம்மை இல்லாமல் நாடு நலிவின்றி நடப்பதற்கான ஒரு ஒளி இருக்க வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்தினுடைய இலக்கணம். எதிர்க்கட்சி என்பது—எண்ணிக்கையில் அதிகமாக உள்ள கட்சியை மாத்திரம் நான் குறிப்பிடவில்லை, எல்லாக் கட்சிகளும், தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட—

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''

என்ற குறளுக்கு ஏற்ப, அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பிலே உள்ள கட்சிகளாகத்தான் இருக்கின்றன. அந்த நிலையிலே பணியாற்றுகிற கட்சிகளை இங்கே நான் பாராட்டினாலும் கூட, பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையில் நேற்றையதினம் கூட சட்டமன்றத் தலைவர் அவர்களிடத்திலே கொடுத்து விட்டுப் போன தாளில்—ஆளும் கட்சியினுடைய தலைவனாக உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள—முதலமைச்சராக இருக்கின்ற என்னைப் பற்றி படிப்பதற்கே கண் கூசக்கூடிய அளவுக்கு எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். ஏதோ எதிர்க்கட்சியைப் பிளந்து அதன் மூலமாக என்னுடைய எதிர்கால வாழ்வை நான் சரிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் என்றும் 'ஏய் கருணாநிதி, நீ ஆட்சிக்கு ஒரு கேடு' என்பதைப்போல வாடா, போடா என்கிற வகையிலே எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். இது எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணம் அல்ல.

இங்கே மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தினை, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்தினை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தினை மாட்டி வைத்திருக்கின்றோம். இங்கிருக்கிற எல்லாப் படங்களுக்கும் மேலாக உத்தமர் காந்தியடிகளுடைய படமும்

இருக்கிறது. அந்த வகையில் இந்த அவையிலே நாம் பரிமாறிக் கொள்கின்ற வார்த்தைகளிலே கண்ணியம் இருக்க வேண்டும். நாம் ஆற்ற வேண்டிய கடமையைப் பொறுத்து இடையிலே கடுமையான வார்த்தைகள் வந்தாலும் கூட—கடமைக்கும் கடுமைக்கும் இடையிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. ஒரு எழுத்துதான் வித்தியாசம்—அந்தக் கடமைக்காக சில நேரங் களில் கடுமை தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து அதற்குப் பிறகு தோழமையோடு பழகக் கூடிய ஒரு பண்பை, அரசியல் நாகரிகத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக் கிறோம்.

எதிர்க்கட்சியைப் பிளக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு என்றைக்கும் இல்லை. அவர்களே அவர்களுக்குள்ளே இருப்பவர்களை நீக்கிக்கொண்டு அவர்களே இரண்டாகப் பிரிந்து போய், ‘இதற்கு எல்லாம் காரணம் முதலமைச்சர்தான், கருணாநிதிதான்’ என்று கூறுவது சரியல்ல. ஆளும் கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு இன்றைக்கு நடுநிலை யாக இருந்து தீர்ப்பு வழங்குகிற அவைத் தலைவராகிய பேரவைத் தலைவர் அவர்களே கூட அன்றைக்கு திருக்குறளில் ‘உட்பகை கூடாது’ என்கிற அந்தக் குறளோடுதான் இந்த அவையைத் தொடங்கினார்கள். அதே உணர்வோடுதான் நானும் இருக்கிறேனே அல்லாமல் யாருக்கும் விரோதமாகச் செயல்பட்டு கட்சியைப் பிளக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. ஏனென்றால் இந்த அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி நான் இந்த அவையிலே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த சம்பள விகிதங்களின் உயர்வை இந்த அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-25 மணி

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அன்றைக்கு விஜயராகவன் எடுத்துச் சொன்ன கருத்தை இந்த அரசு மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் இந்த நேரத்திலே விவாதிக்கப்பட வேண்டிய வைகள் அல்ல; சட்டமன்றத்தைப் பற்றியோ அல்லது வேறு பல திட்டங்களைப் பற்றியோ நிதிநிலை அறிக்கையிலே பேசும் போது விவாதிக்கப்பட வேண்டிய கருத்துக்கள். அதனால் இன் றைக்கு நான் அவைகளை அலட்சியப்படுத்திவிட்டேன் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் எடுத்துக் காட்டி, சீனி வாசன் அவர்கள் சொன்னார்கள், ஒரு ஊராட்சி மன்றத் தலைவருக்கு, ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற அதிகாரம் கூட எம். எல். ஏ.க்களுக்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டில் எம்.எல்.ஏக்கள் என்றால் எம்.பி.க்கள் என்றால் அப்படி பழகிவிட்டோம். உண்மையிலேயே ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான், ஒன்றியத் தலைவர்கள்தான்

மக்களோடு இணைந்து அவர்களுக்குத் தேவையான பணிகளை, சேவைகளை, திட்டங்களை, வளர்ச்சிக் காரியங்களைச் செய்ய வேண்டியவர்கள். ஆனால் நம்முடைய நாட்டில் எப்படி பழகி விட்டோம் என்றால் சட்டமன்றத்திற்கு வருவது சட்டங்களை இயற்றுவதற்காக, நாட்டுக்குத் தேவையான சட்டங்களைப் பற்றி ஆராய்வதற்காக, அவைகளைப் பெரும்பான்மையாக இருந்து நிறைவேற்றிக் கொடுப்பதற்காகத்தான் சட்ட மன்றம் இருக்கிறது. ஆனால் இங்கே ஒரு எம். எல். ஏ., எம்.பி. ஆனால் தொகுதிக்கு எத்தனை முறை வந்தாய் என்று கேட்கின்ற அளவிற்கு ஒரு பழக்கத்தை உண்டாக்கிவிட்ட காரணத்தால் ஒரு ஒன்றியத் தலைவருக்கு இருப்பதைப் போன்ற அதிகாரங்கள் எம்.எல்.ஏ. க்களுக்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. அது சரியா, தவறா என்ற விவா தத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை. அப்படி ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலைக்கு ஏற்ப சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவை களை எல்லாம் தொடர்ந்து பரிசீலித்து அடுத்தடுத்து வருகின்ற இதுபோன்ற பிரச்சினைகள் ஆராயப்படும்போது இயன்றதை இந்த அரசு செய்யும் என்பதை உறுதியாகத் தெரிவித்து இந்த சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;